# அகிலன் பிறந்ததின நூற்றாண்டு விழா; சென்னையில் இருநாள் கருத்தரங்கு

எழுத்தாளர் அகிலன் நூற்றாண்டு விழா சென்னை லயோலா கல்லூரியில் இரண்டு நாள் கருத்தரங்காக நடைபெற்று வருகிறது. இதன் தொடக்கவிழாவில் சாகித்திய அகடமியின் பொறுப்பு அலுவலர் சந்திரசேகர ராஜு அனைவரையும் வரவேற்று, சாகித்திய அகடமியின் செயற்பாடுகள் குறித்து விளக்கினார்.



சிறப்புரை ஆற்றிய கல்லூரியின் தாளாளர் போனிபஸ் ஜெயராஜ் "சாகித்திய அகடமியானது கொரோனா காலத்திலும் இணையவழியில் நிகழ்ச்சிகளை நடத்தித் தமிழை வளர்ப்பதில் முக்கிய அமைப்பாக இருந்து வருகிறது. அகிலனின் பன்முகத் திறமையை வெளிப்படுத்தும் கருத்தரங்காக இது அமையும். தமிழக அரசு 100 இளம் பத்திரிகையாளர்களை லயோலா கல்லூரியில் உருவாக்க பொருளுதவி செய்துள்ளது" என்று கூறினார்.

அறிமுக உரை ஆற்றிய பாரதிபாலன், "அகிலன் விடுதலைப் போராட்டத்தில் கலந்து கொள்ள விரும்பி பாரதியார் பாடல்கள் தடை செய்யப்பட்டிருந்த காலத்தில் துணிந்து பாட முயற்சி செய்தார். பள்ளிப் பருவத்தில் 'அவன் ஏழை' என்ற தலைப்பில் ஒரு சிறுவனின் ஏக்க உணர்வைக் குறித்த தன் முதல் கதையை எழுதினார். காந்தி மீது கொண்ட பற்றால் கதர் உடுத்தித் திருமணம் செய்தவர் அகிலன்" என்று கூறினார்.

தொடக்கவுரை நிகழ்த்திய திலகவதி IPS, ஞானபீடம் பெற்ற முதல் எழுத்தாளர் அகிலன் என்றும், 'எழுத்தும் வாழ்க்கையும்' என்ற அவரது சுயசரிதை அவரைப் பற்றித் தெளிவாக அறிந்து கொள்ள உதவும் என்றும் கூறினார். தலைமையுரை ஆற்றிய பத்மஸ்ரீ கவிஞர் சிற்பி, தான் 1952 இல் வெளிவந்த 'சிநேகிதி' என்ற பின் நவீனத்துவ நாவல் குறித்துப் பேசினார். வாழ்வுக்காகத்தான் கலை, அன்பு காட்டுவதே கலைஞனின் நோக்கம் என்பதே அகிலனின் சித்தாந்தம் என்றும் தன் அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டார்.

வாழ்த்துரை வழங்கிய அகிலனின் மகன் அகிலன் கண்ணன், தன் தந்தை ICS படிக்க வேண்டும் என்று தன் தாத்தா விரும்பியதாகவும் அது நடைபெறவில்லை என்றும், பல்கலைக்கழகங்களில் நவீன இலக்கியங்களை கொண்டு செல்ல குரல் கொடுத்தவர் தனது தந்தை என்றும் கூறினார். இறுதியாக தமிழ்த் துறைத் தலைவர் அமல்ராஜ் நன்றி கூறினார்.

தலைமையுரையாற்றிய கே.எஸ்.ராதாகிருஷ்ணன், "அகிலன் அறச்சீற்றம் கொண்டவர், வள்ளுவரை வழிகாட்டியாகக் கொண்டவர். நேரு, இந்திரா, ஜெயப்பிரகாஷ் நாராயண், காமராஜர், அண்ணா , பக்தவத்சலம் , கலைஞர், எம். ஜி. ஆர் என்று பல தலைவர்களிடமும் பழகியவர். அவர்களும் இவரிடம் மரியாதை கலந்த அன்பு செலுத்தினர். அவர்களில் பலரையும் தம் படைப்புகளில் நேரடியாகவே விமர்சித்த சுதந்திர மனிதர். கலைஞர் சிறையில் அடைக்கப்பட்ட போது கலைஞர் அகிலனின் 'வேங்கையின் மைந்தன்', 'பொன்மலர்' நாவல்களை வாங்கி வரச் சொல்லிப் படித்தார். இலங்கையில் பலரது வீடுகளில் அகிலனின் நூல்கள் பலவும் இருக்கும். அகிலனின் புகைப்படங்களைக் கூட சில வீடுகளில் கண்டுள்ளேன். ஒரு முறை அமிர்தலிங்கம் துணைவியார் அகிலனைப் பார்க்க விரும்பிச் சென்றபோது, 'நீங்கள் இலங்கை வந்திருந்த போது ஓரிடத்தில் யானைக் கூட்டம் விரட்டியதைக் குறித்து எழுதியிருந்தீர்கள். அது எங்கே' என்று கேட்டார். அகிலன் சிரித்துக் கொண்டே 'இவ்வளவு நினைவு வைத்துள்ளீர்களே' என்று பதிலும் கூறினார். அடுத்து உரையாற்றிய உமா மோகன் "வீட்டுக்குள் முடங்கிக் கிடந்து அடுப்பூதுவதற்கு மட்டுமே பெண்கள் அல்ல. சுதந்திரப் போராட்டத்தில் ஆணுக்குப் பெண் இளைப்பில்லை காண் என்பதுபோல் பெண்களும் வீதிக்கு வந்து சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்றதை வெளிப்படுத்திய சிறந்த நாவல் பெண்.

அதேபோல் 'பொன் மலர்' நாவலில் நாயகி சங்கரி எந்த அளவுக்கு முக்கியமோ அதேபோல் ராஜேஸ்வரியும்படைக்கப்பட்டதே அகிலனின் பார்வையில் பெண்கள் எவ்வளவு முக்கியத்துவம் அடைந்துள்ளனர் என்பதை உணரமுடிகிறது" என்றார்.

அகிலன் பிறந்த நூற்றாண்டில் அவரது எழுத்தையும் வாழ்க்கையையும் நினைவு கூரும் விதத்தில் லயோலா கல்லூரியில் இருநாள் கருத்தரங்கு சாகித்திய அடமியால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதன் பாராட்டு முனைவர் பாரதி பாலனுக்குரியவை. அவர் தான் இந்தக் கருத்தரங்கை முன்னெடுத்தவர். ஒழுங்கு செய்தவர்.

சிற்பி பாலசுப்ரமணியம், திலகவதி, அகிலன் கண்ணன், கே.எஸ்.ராதாகிருஷ்ணன், கீழாம்பூர் சங்கர சுப்ரமணியம், பேராசிரியர் இரா. காமராசு, (06ஆம் பக்கம் பார்க்க)





